கள். ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதனால் இறந்த வர்களுக்கு நிதி உதவி செய்யும் இந்த அரசு என்று தெளிவாகத் தெரிவித்ததற்குப் பிறகு திருப்பித் திருப்பியும் கேட்டுக்கொண்டு இருப்பது அவை நேரத்தை விணாக்குவதாக நான் கருதினால் மன்னிப்புக்கு உரியவனாக ஆவேன் என்று நம்புகிறேன்.

நிலவரி தள்ளுபடி

*2474 திரு. வெ. இராசு; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சியால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலவரி தள்ளுபடி செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 1398 பசலி ஆண்டுக்கு நிலவரி முதலியவற்றை தள்ளுபடி செய்தும், அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி மற்றும் அரசு கடன்கள் வசூலிப்பதை அடுத்த பசலி ஆண்டுக்கு தள்ளி வைத்தும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. வெ. இராசு; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்பது மிகவும் பின் தங்கிய மாவட்டமும், வறட்சி மாவட்டமும் ஆகும். தென் மாவட்டங்களில் அதிகமாக, பரவலாக மழை பெய்திருந்தாலும் புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நடப்பு பசலியிலே இந்த ஜனவரியிலேயிருந்து வசூல் ஆரம்பித்து விட்ட காரணத்தால் அங்குள்ள மக்கள் நில வரிகளைக் கட்டுவதற்கும், அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மீண்டும் ஏதாவது தொழில்கள் தொடங்குவதற்கும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன வகையிலே ஏதாவது வறட்சிப் பணிகளை ஆரம்பித்தும், நிலவரிகளைத் தள்ளுபடி செய்தும், மற்றும் நீண்ட காலக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்தும் அரசு உதவி செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவரவர்களே, வடகிழக்குப் பருவமழை இயல்பாகப் பெய்வதைக் காட்டிலும் 43 சதவிகிதம் குறைச்சலாகப் பெய்துள்ளது. அதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் 11. அதிலே புதுக்கோட் கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, குளத்

தூர், திருமயம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 7 வட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி முதலியன தள்ளுபடி செய்தும், அரசுக்குச் செலுத்தவேண்டிய நில வரி பாக்கி மற்றும் அரசுக் கடன்களை வசூலிப்பதை அடுத்த ஆண்டுக்குத் தள்ளி வைத்தும், அரசு ஆணைப்பிறப்பித்துள்ளது. கேட்ட கேள்விக்குப் பதில் பொதுவாக வழக்கத்திற்கு மாறுபட்ட இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் வறட்சி அல்லது பஞ்ச காலங்களில் பயிருக்கு இழப்பு ஏற்படும் பொழுது அரசு அந்த நிலங்களுக்கான நில வரி மற்றும் ஏனைய வரிகளான உள்ளூர் வரி மேல் வரி முதலியவற்றை வசூலிப்பதைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது அல்லது தள்ளுபடி செய்கிறது. அவ்வாறான நேர்வு களில் அரசுக்குச் செலுத்த வேண்டிய நில வரி பாக்கி மற்றும் அரசுக் கடன்களை வசூலிப்பதை அடுத்த விளைச்சல் ஆண்டுக்குத் தள்ளி வைக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையை ஏற்று ரூ. 60.17 இலட்சத்திற்கு நிலவரி மற்றும் உள்ளூர் வரி, உள்ளூர் கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர் வரி, கூடுதல் தீர்வை ஆகியவற்றை பசலி ஆண்டு 1398க்கு அரசு தள்ளுபடி செய்திருக்கிறது.

9-35 மணி

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் 11 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று சொன் னார்கள். அதில் திண்டுக்கல் மாவட்டம் இணைக்கப்பட்டி ருக்கிறதா? காயிதே மில்லத் மாவட்டத்தில் பல பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் மழை இல்லாமல் சிரமப்படுகிறார்கள். காய்ப்பு கொடுத்த தென்னை மரங்கள் எல்லாம் கூட பட்டுப் போயிருக்கின்றன. இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக் கிறதா? அப்படி வந்திருந்தால் அவர்களுக்கு நிவாரணம் அளிப் பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தகவல் கிடைக்கவில்லை. மாறாக இராம நாதபுரம், திருச்சிராப்பள்ளி, பசும்பொன் தேவர் திருமகனார், சிதம்பரனார் மாவட்டம், மதுரை, காமராசர், புதுக்கோட்டை திருநெல்வேலி கட்டபொம்மன், தஞ்சாவூர், தென்னாற்காடு செங்கை அண்ணா ஆகிய 11 மாவட்டங்களைப் பற்றிய விவரங் கள் கிடைக்கப்பட்டிருக்கின்றன. காயிதே மில்லத் மாவட்டத் தைப் பற்றி விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை

1990 சனவரி 23]

களை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களுக்கு வரிச்சலுகை வழங்குவதாகச் சொன்னார்கள். அண்மையில் பெய்த பெருமழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக முதுகுளத்தூர், கமுதி வட்டங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில், வரி தள்ளுபடி செய்வதற்கும், தக்காவிக் கடன்களை ரத்து செய்வதற்கும், புதியதாக ஜீவனாம்ச கடன்கள் போன்றவைகளை வழங்குவதற்கும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். பாதிக்கப்பட்ட அந்த மாவட்டங்களுக்கு விரைந்து கலெக்டர் அவர்களும் அவரை ஒட்டிய அதிகாரிகளும் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு ஆவன செய்து கொண்டிருக்கிறார்கள். செய்தார்கள் என்ற உண்மையை நான் இங்கே எடுத்துவைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற 11 மாவட்டங்களில் கோவை மாவட்டம் இடம் பெறவில்லை, பல்லடம், திருப்பூர், அவினாசி போன்று பல தாலுக்காக்களில் தற்போது கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அந்த மாவட்டமும் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அதற்குரிய நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, பட்டியலில் சேர்ப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. தாராளமாகச் சேர்க்கலாம்.

திரு. கே. ஆர் இராமசாமி : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டமும், தேவர் திருமகனார் மாவட்டமும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இப்போது வரி வசூலிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. மாறாக வசூலிக்கக் கூடாது என்று கடுமையாக உத்திரவிடப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட தாலுக்காக்களுக்கும் மாவட்டங்களுக்கும் நிவாரணம் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் அதைப்போல வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளைக் காப்பாற்ற இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வர அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். (சிரிப்பு).

பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்குப் பேருந்து வசதி

*திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்போது பேருந்து வசதி இல்லாத ஆயிரத்துக்கு (1000) மேற்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாலை வசதி, பயணிகளின் எண்ணிக்கை, ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கிராமங்களிலுள்ள மக்கட் தொகையை கருத்தில் கொள்ளாமல் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

9.40 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1000 மக்களும் அதற்குக் கீழும் வசிக்கக் கூடிய பகுதிகளுக்கு, கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்றுள்ள இந்தக் கேள்விக்கு சாலை வசதியும் மக்கள் தொகையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு பேருந்து வசதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே கூறி இருக்கிறார்